வித்துக்கொள்கிறேன். ஆனால், இது இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டாவது இதற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, உணவு விடுதிகளுக்குச் சொந்தமான கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று நான் மத்திய அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்திலே யோசனை தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசு நிதியுதவி செய்யுமானால், அது பற்றி பின்னர் கவனிக்கலாம்.

மாப்படுகை கிருஷ்ணன் கோயில்

*263 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் தாலுக்கா, மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயில் அண்மையில் அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் சொத்து விவரம் என்ன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இவ்வாலயத்திற்குச் சொந்தமான, பண்டாரவாடை, மாப்படுகை கிராமத்தில் ஆர்.எஸ். 28/1–ல் ஒரு ஏக்கர் 8 செண்ட் நஞ்சை நிலம், திரு ஆர். இராமலிங்கம் பிள்ளை என்பவர் அனுபவத்திலும், மாயவரம் நகரம், முனிசிபல் வார்டு 7, பிளாக் 53, நகர சர்வே 1562/2, நந்த வனம் புறம்போக்கு 88 செண்ட் நிலம் திரு கே. இராமய்யா நயினர் என்பவர் அனுபவத்திலும் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தாலுகாவிலே மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ராமையா நாயுடு என்பவர் இடித்துத் தள்ளிவிட்டு, தரைமட்டமாக்கிவிட்ட பிறகு—அதை அறநிலையத் துறையின் மூலம் எடுத்துக் கொண்ட பிறகும்—அந்தச் சொத்துக்களை அறநிலையத் துறையினரிடம் ஒப்படைக்காத காரணத்தைக் கண்டறிந்து அதை விரைவிலே அறநிலையத் துறையினிடத்திலே ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு இந்தக் கோயில் அறநிலையத் துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட்டு சம்பந்தம் என்பவரை அறங்காவலராக நியமித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு அந்த ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை சுவா

தீனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கை களை உடனடியாக எடுக்க வேண்டுமென்றும், அறங்காவலர்க்கு ஆணை யிடப்பட்டுள்ளது. இடிந்து கிடக்கிற கோயிலையும், கட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயில் சொத்துக்களையெல்லாம் சரி வரத் கவனிக்காததற்குக் காரணம் அறநிலைய இலாகாதான், யாராவது மனுப் போட்டால்தான் அதற்குப் பிறகு கவனிக்கிறார்கள். (You br ng it under the control of the H. R. E. Board) என்ற நிலைமை தான் இருக்கிறது. இந்த இலாகா தானுகவே இதைப் பற்றி யெல்லாம் ஆராய்வதற்கு என தனிப் பிரிவு ஒன்றை வைத்திருக்கிறதா ? எந்த அடிப்படையிலே கோயில் சொத்துக்கள் எல்லாம் கண்ட்ரோல் செய்யப் படுகின்றன ; கண்காணிக்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இதற்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தி கவனிப் பார்களா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : கோயில் சொத்துக்களைக் கண் டறிவதற்காக ஒரு அலுவலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கிராமம் கிராமமாகச் சென்று ஆயிரக்கணக்கான ஏக்கர் கோயில் நிலங்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள். மேற் கொண்டு தொடர்ந்து அவர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினர் திரு ராமையா நாயுடு அவர்களிடத்திலே அந்தச் சொத்துக்களைக் கேட்கச் சென்றபோது அவர் அவர்களை அடித்துத் துரத்தி இம்சித்து அனுப்பியிருக் கிறார் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

பெரியபாளையத்தில் அனுதை விடுதி

*264 வின.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையத்தில் உள்ள பவானி அம்மன் கோவில் நிர்வாகத்தின் கீழ் அனுதை விடுதி ஒன்று அமைப்பதில் கால தாமதம் ஏற்படுவதற்கான கார்ணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெரியபாளையம், பவானி அம்மன் கோயில் நிர்வாகத்தின்கீழ் அனுதை விடுதி ஒன்று அமைக்க இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர், சென்னை 4—4—1972 அன்று ஒப்புதல் அளித்தார். அதற்கான மதிப்பீட்டுக்கு ஆணையர் 21—7—1972 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். ஒப்பந்த அறிவிப்புகள் கிடைக்கப் பெற்றதும் கட்டிட வேலை துவக்கப்படும்.